**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.</u>**

**<u>O.S. No. 32 /2021 DW2</u>**

16.04.2026 **<u>பி.வா..சா.2 சண்முகம் சத்திய வாக்குமூலத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை -</u>**

எனக்கு எழுத படிக்க தெரியாது. என்னுடைய முதன்மை வாக்குமூலத்தில் என்ன எழுதி உள்ளது என நான் படித்துப் பார்த்தேனா என்றால் இல்லை. யாராவது வாசித்து காண்பித்தார்களா என்றால் ஆம் வாசித்து காண்பித்தார்கள், அதில் உள்ள விவரங்களை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். முதன்மை வாக்குமூலத்தில் கண்டுள்ள பத்திரங்களின் தேதிகளை தற்போது சொல்ல முடியுமா என்றால் இயலாது. பழனிக்கு எழுதி வைத்ததாக சொல்லப்படும் தானப்பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் ஏதேனும் போட்டேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் 2 இலக்க சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் அனைத்தும் ஆதியில் மாணிக்கத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மாணிக்கத்தின் மனைவி அமிர்ததம்மாள் என்றால் சரிதான். அவருக்கு ஒரே மகள் உண்ணமலை என்றால் சரிதான். மாணிக்கத்திற்கு அவரது மனைவி மற்றும் மகள் மட்டுமே வாரிசுகள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பழனி உண்ணாமலையின் மகன் என்றால் சரிதான். மாணிக்கம் இறப்பிற்கு பிறகு வாரிசு என்ற முறையில் அவரது மனைவி மற்றும் மகளுக்கு மட்டுமே சொத்து உரிமையானது என்றால் சரிதான். அமிர்ததம்மாளுக்கு வழக்கு சொத்தில் முழு உரிமையும் கிடையாது என்றால் சரிதான். அமிர்ததம்மாளுக்கு முழு சொத்தையும் 1ம் பிரதிவாதி பழனிக்கு 04.11.2004ல் தானப்பத்திரம் மூலம் எழுதி வைக்க உரிமையில்லை என்றால் சரியல்ல. அமிர்ததம்மாள் முழு சொத்தையும் எந்த காலத்திலும் அனுபவித்ததில்லை என்றால் பழனி தான் அனுபவித்து வந்தார். பழனிக்கு சொத்தில் உரிமையும், அனுபவமும் இல்லை என்றால் சரியல்ல. உண்ணாமலை, கோபால் ஆகியோரிடம் இருந்து சொத்தை கிரையம் வாங்கினேன். கிரையப்பத்திரத்தில் விற்பவர் பெயர் பழனி என கண்டுள்ளது என்றால் சரிதான். பத்திரத்தில் உள்ள வாசகங்கள் யார் சொல்லி எழுதப்பட்டது என்றால் பழனி சொல்லிதான் எழுதப்பட்டது. கிரையப்பத்திரத்தில் கோபால் மற்றும் உண்ணாமலை ஆகியோரிடம் கிரையம் பேசி வாங்கப்பட்டது என கண்டுள்ளதா என்றால் கண்டுள்ளது. நான் தவறாக சொல்கிறேன் என்றும், நான் சொல்வது போல் மேற்படி வாசகம் பி.வா.சா.ஆ.12ல் காணப்படவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.12ல் பழனி குடும்ப செலவிற்கும், குடும்ப கடன்களை பைசல் செய்யவும் கிரையம் கொடுத்ததாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான்

ரூ. 1,10,000/- கிரையம் பெற்றேன். ஆனால் பி.வா.சா.ஆ.12ல் ரூ. 1 லட்சத்திற்கு தான் கிரையம் செய்யப்பட்டதாக கண்டுள்ளது என்றால் சரியல்ல, நான் ரூ. 1,10,000/- தான் கொடுத்தேன். கோபாலுக்கு மேற்படி சொத்தில் உரிமையுள்ளதா என்றால் இல்லை. உண்ணாமலை எனக்கு 04.10.2012ல் வழக்கு சொத்தை நான் கிரையம் பெற்றது உண்ணாமலையை கட்டுப்படுத்தாது என சொல்லி வா.சா.ஆ.3 ஐ எனக்கு அனுப்பினார் என்றால் சரிதான். நான் பதில் கொடுக்கவில்லை, பழனி தான் பதில் கொடுத்துள்ளார். இந்த வழக்கில் எனது தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பழனி எனக்கு கொடுத்த கிரையம் செல்லாது என்றும், வாதியின் பாகத்தை மேற்படி கிரையம் கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. நான் பழனியிடம் இருந்து சொத்தை வாங்கியதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.